
பொய்யா விளக்கு

ஜனவரி — 1974



உலகின் ஒளி நானே

— கிறிஸ்துநாதர்

பொய்யா விளக்கு

விளக்கு : 19 * ஜனவரி—1974 * சுடர் : 1

முடியும் நாளும் விடியும் நாளும்

வாழ்க்கை ஓர் ஏடு !
ஆண்டுகள் அதன் தாள்கள் !
எண்ணம் என்னும் நீரால்
செயல்கள் என்னும் மையால்,
வெற்றி என்னும் வண்ணத்தால்
மறைந்த ஆண்டில் வரைந்து வந்தோம் !
இறுதி வரி முடிந்தது !
சரி, இனித் திருப்பிப் பார்ப்போம் !
அடடா ! ஏன் இத்தனை காலி இடங்கள் ?
ஆம் ! நீர் எழுத்துகள் நிலைக்கவில்லை !
எண்ணம் இருந்தால் மட்டும் போதாது !
ஏற்றமுள்ள செயல்கள் வேண்டும் !
மையால் எழுதப் பெற்றவை மகிழ்வூட்டுகின்றன !
வண்ணத்தால் எழுதியவை கண்ணைக் கவருகின்றன !
அடிக்கோடிட்ட வரிகள் உண்டா ?
தடித்த எழுத்துச் சொற்கள் உண்டா ?
உண்டெனில் மகிழ்வோம் !...அன்றெனில்...
அடுத்த பக்கத்தை அழகு படுத்துவோம் !
அழுத்தி எழுதுவோம் !
சிந்தனைக் கோலை நிமிர்த்திப் பிடிப்போம்
முதல்வரி முதல் முடியும் வரி வரை
வண்ணத்தால், வளமிகு செயலால் வரைவோம் !
தொடங்குவோம் முதல் வரியை...
தொடர்வோம் பிற வரிகளை... !

— மரிவளன்

தொட்டுணர்ந்தேன்!

ஊருக்கு வெளியே! எங்கு நோக்கினாலும் கம்மிருட்டு! அந்த இருளில்—என்னால் மறக்க முடியாத இரவில் ஒரு குழந்தையின் குரல் கேட்கிறது. வாடைக் காற்று நாலா பக்கமும் வெடவெடக்கச் செய்து ஓசையுடன் வீசிக்கொண்டிருக்கிறது. அந்த வன்காற்றோடு மழலையின் மொழியும் குரலும் கலந்து வெளியாகிறது. எனக்கும் கைகால் நடுங்குகின்றன. ஆயினும் உள்ளம் ஒடிந்து வாடிய எனக்குத் தெம்பளிக்கும் தேன்மொழியாக அல்லவா இருக்கிறது!

மாடுகள் அடையும் கொட்டில்! மழலை மொழி பேசும் செல்வன் சிரிக்கும் காட்சி இப்போது. நானும் என்னை மறந்து இடைஞ்சல்களை வென்று அந்தப் பக்கம் சென்று விட்டேன். ஒருவிதக் கலகலப்பு, களிப்பூற்று, உவகை ஓட்டம் என்னைத் தழுவிச் சென்றதை உணர்ந்தேன். எப்படியாவது உள்ளே சென்று என்ன, யார், எவர், எங்கிருந்து வந்தார்கள். ஏன் இந்தவிதமான அவலநிலை, உறவினர்கள் யாருமில்லையா, தனியாகக் கணவனும் துணைவியும் இருக்க என்ன காரணம், குழந்தை அழகாக இருந்தாலும் அவலநிலையில் ஏன்தான் பிறக்க வேண்டும் —என்று இடைவிடாது கேட்டு விடையும் பெறவேண்டும் என்ற உந்துணர்வு என்னைத் தள்ளியது. நானும் அவ்வுணர்விற்கு ஆட்பட்டு நகர்ந்தேன்.

இடத்தையும் அடைந்து விட்டேன். காட்சியையும் கண்டேன். அருகில் சென்ற என்னைக் குலுக்கியது அக்காட்சி. கனவா இது? என்னையே கிள்ளிக்கொண்டேன். உணர்வு என்னைவிட்டு ஓடிவிடவில்லை. உண்மையான காட்சிதான். நானே என் கண்முன் காண்கிறேன்! "என்ன தாத்தா" என்று என்னைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரிக்கிறது குழந்தை. எனக்கு ஒரே ஆச்சரியம்! என்னடா! சிறிது நேரத்திற்கு முன் அழுகுரல் கேட்

டேன், துன்பத்தில் ஆழ்ந்தேன்; இப்போதோ நகை செய்து வாய்திறந்து சிரிக்கிறது குழந்தை! என்ன வியப்பு! புதுமையான குழந்தைபோல் இருக்கிறதே!

சிறிது நேரம்தான் அங்கே நின்றிருப்பேன். என் உள்ளத்தில் ஒருவகை இன்ப உணர்வு எழுந்து விழுந்தது, விழுந்து எழுந்தது. எழுந்த உணர்வு என்னையே உலுக்கி நீண்ட நேரம் என்னுள் தங்கியது. என்ன உணர்வாக இருக்கும் என்றுதான் சொல்ல முடியவில்லை. ஆயினும் நான் அதை அனுபவித்தேன். இன்ப உணர்வா? ஆம். ஆனால் அது மட்டும் இல்லையே! எழுச்சி உணர்வா? ஆம். ஆனால் அது மட்டுமா? வீர உணர்வா? அதுவும்தான். அன்பு உணர்வா? ஆமாம். அதுவும்தான். எல்லா வகையான நல்லுணர்வுகளும் மேலுணர்வுகளும் என்னைத் தொட்டுச் சிலுசிலுக்க வைத்தன.

புன்னகை புரிந்து நிற்கும் குழந்தையின் அருகில் சென்று விட்டேன். நான் அண்மித்து வருவதைக் கண்டு ஆனந்தமுடன் துள்ளுகிறது. கைகளை நீட்டுகிறேன். என்னுடைய நெஞ்சில் ஒருவிதத் தெம்பு தோன்றுகிறது. மகிழ்வு தோன்றி என்னை உவகைக் கடலில் ஆழ்த்துகிறது. உவர்ப்புக் கடல் உவப்புக் கடலாகிறது. நான் அந்தக் குழந்தையைக் கைகளில் ஏந்தி அங்குமிங்கும் ஆட்டுகிறேன். அதே நேரத்தில் என் மனம் குளிர்கிறது. வெம்மை நாடிய உள்ளம் அந்தக் குழந்தையிடம் குளிருக்கு வெம்மை இருப்பதை அறிகிறது. என்னையே மறந்து விடுகிறேன். இதுபோல் என்னுடைய நீண்ட இவ்வுலக வாழ்வில் என்றாவது இன்பம் அனுபவித்திருப்பேனா என்று என்னையே கேட்கிறேன். ஒருவேளை உழைப்பின் ஊதியம் பெறும்போது இது மாதிரி உள்ளத்துள்ளுகை ஏற்பட்டது உண்டு. ஆனால் இதே உணர்வு இன்றுதான் முதல் தடவை. இதேபோல் என்றும் கிடைக்காது என்று நினைத்து நினைத்து நெக்குருகி நிற்கிறேன்.

அன்புச்சுடர் என்னிடம் ஒளியைக் காட்டுகிறது. அறிவுச்சுடர் என்னைக் கூட்டிச் செல்கிறது. ஆனந்தச் சுடர் என்னை அரவணைக்கிறது. அமுதச்சுடர் என்னை ஆழ்த்துகிறது. ஆரத்தழுவிய என் கைகள் பேறுபெற்றவை, பெருமை கொண்டவை, கண்ட கண்கள் சிறப்படைந்தவை, அவ்விடத்தை நோக்கி உறுதியுடன் தள்ளாடும் வயதிலும் நடந்து சென்ற கால்கள் மேன்மையுடையவை என்று என்னையே மெச்சி, அந்தச் சிறு குழந்தையை எண்ணி எண்ணி மகிழ்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறேன்.

அக்குழந்தை இறைக்குழந்தை! என்கலி தீர்க்க வந்த இயேசுக் குழந்தை!

ஆண்டின் துவக்கத்தில் அவனை நான் அணைத்திட்டேன்! அவன் என்னைத் தன் அன்பால் பிணைத்திட்டான். என் கரம் பிடித்து எங்கோ என்னை அழைத்திட்டான். இருகண்களையும் மூடிக்கொண்டு இன்பமுடன் அடியெடுத்து வைத்திட்டேன்!

— ம. விக்டர், பூனா

இனிது வாழ்வோம்!

கவிஞர் கோவை இளங்குன்றன்

உண்மையை மனதிற் தேக்கி
உயர்வினை யுலகில் ஆக்கி
திண்மையாய் புதிய ஆண்டில்
திறனுடன் இனிது வாழ்வோம்!

வன்மையைச் செயலில் நீக்கி
வறுமையை நாட்டிற் போக்கி
பன்மையாய் புதிய ஆண்டில்
பதமுடன் இனிது வாழ்வோம்!

நன்மையை நடப்பில் தூக்கி
நலிவினை வாழ்வில் தாக்கி
தன்மையாய் புதிய ஆண்டில்
தரமுடன் இனிது வாழ்வோம்!

அன்பினை அகத்திற் கொண்டு
அறிவினை அவனியிற் றுண்டு
இன்பமாய் புதிய ஆண்டில்
இதமுடன் இனிது வாழ்வோம்!

பண்பினைப் பாரில் மொண்டு
பவமிலா வாழ்வு கண்டு
வண்ணமாய் புதிய ஆண்டில்
வளமுடன் இனிது வாழ்வோம்!

மனதை மாசுபடுத்தும் இதழ்

உடல் அழிவுக்குரிய ஒரு பொருள். ஆனால் அது கடவுளின் படைப்பு. அதனை ஆன்மா உயர்த்துகிறது; மேன்மைப் படுத்துகிறது. தன் இதயம் தன்னில் இறைவன் வாழ்கிறார் என்ற உண்மையை உணரும் ஒவ்வொரு கிறிஸ்துவனும் பரிசுத்த ஆவியின் கோவிலாகவும் கிறிஸ்துவின் அங்கத்தினனாகவும் உயருகிறான். அவன் உள்ளத்தின் இறை வாழ்வு பற்றி அவன் பெருமைப்பட வேண்டும். ஆனால் அவ்வாழ்வானது இகழப்பட்டால், எள்ளி நகையாடப்பட்டால் இறைவனே இகழப்படுகிறார், எள்ளி நகையாடப்படுகிறார்.

"நீங்கள் கடவுளின் ஆலயம் என்பதும், கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கின்றார் என்பதும் உங்களுக்கு தெரியாதா? கடவுளின் ஆலயத்தை எவனாவது அழித்தால், அவனை கடவுள் அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது. நீங்களே அவ்வாலயம். (1 கொரி. 3 : 16–17)

"ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான். என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார். நாங்களும் அவனிடம் வந்து அவனோடு குடிகொள்வோம்." (அரு 14 : 23)

"நீங்களோ கிறிஸ்துவின் உடல். ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு." (1 கொரி. 12 : 27)

"இதோ உங்களுக்கு மறைபொருளானது ஒன்று சொல்லப்போகிறேன். நாம் அனைவருமே சாகமாட்டோம்; ஆனால் அனைவருமே வேற்றுரு பெறுவோம். ஒரு நொடியில், கண்ணிமைப் பொழுதில், கடைசி எக்காளம் முழங்க இது நடைபெறும். ஆம், எக்காளம் முழங்கும்; அப்போது இறந்தோர் அழிவில்லாதவர்களாய் உயிர்த்தெழுவர். நாமும் வேற்றுரு பெறுவோம். ஏனெனில் அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்துகொள்ள வேண்டும்.

சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்துகொள்ள வேண்டும்." (1 கொரி. 15 : 51-53)

இறைவா, இவ்விதழைக் காண நான் வெட்கப்படுகிறேன். என் உடல் சிலிர்க்கிறது. என் மனம் அனுமதிக்கவில்லை. உமது புனிதத்தின் நிறைவில் இவ்விதழைக்கண்டு மிக துயரடைந்திருப்பீர். எல்லா அலுவலர்களும் அந்த இதழை வாங்க உதவினர். ஒரு சிறுவன் விரைவாக ஓடி அதனை வாங்கி வந்தான்.

இதோ அந்த இதழ்! அதன் முதல் பக்கங்களில் ஆடையில்லா உடல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த அருவருப்புக்குரிய இதழோ, கை மாறி மாறிச்செல்கிறது. எல்லா அலுவலகங்களையும் சுற்றி வருகிறது.

அந்த, மனித உடலின் மதிப்பை குறைக்கும் படங்களைப் பார்த்து எத்தனையோ முட்டாள்தனமான புன்னகைகள் பூக்கின்றன. காம வெறிகொண்ட கண்ணோட்டங்கள்—அந்தோ பரிதாபம்! அப்படி செய்பவர்கள் எல்லாம் மனிதர்களல்ல, ஆன்மா அற்ற வெறும் காற்றடைத்த பைகளே! வயது வந்தவர்களுக்கும், கல்நெஞ்சம் கொண்டவர்களுக்கும் கெட்ட மனத்தவர்களுக்கும் அவ்விதழ் ஒரு விளையாட்டுப் பொருளாக இருக்கிறது.

இருப்பினும் மனித உடல் அழகானது. இறைவா! அழகின் நிறைவு நீரே. கலைஞர்களுக்கெல்லாம் கலைஞராகிய நீர் மனித உருவெடுக்க காத்திருந்தீர். உமது ஆற்றல்மிகு அழகுடைய கரங்களால் மனித உடலுக்கு உருகொடுத்தீர். மண்ணாலான உயிரில்லா உருவத்தினுள் உமது சாயல்கொண்ட ஆன்மாவை புகுத்தி உயிர் கொடுத்தீர். அத்தருண முதல் இவ்வுடலுக்கு மதிப்பு காட்ட வேண்டுமென்று கட்டளையிட்டீர். ஏனெனில் உடல் அதனுள் உள்ள ஆன்மாவை பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக இருக்கிறது. எங்கள் ஆவிகள் எங்கள்

தோழர்களின் ஆவிகளோடு உறவாட எங்கள் உணர்ச்சியுள்ள உடல் அவசியம். வாயிலிருந்து தொடர்ந்து வெளிவரும் வார்த்தைகள் எங்களை மற்றவர்களிடம் அழைத்துச் செல்கின்றன. எமது முக இதழ்களில் தோன்றும் புன்னகைகள், கண்ணோட்டங்கள் இவையெல்லாம் எமது ஆவியைய வெளிப்படுத்துகின்றன. கைகுலுக்கல், கைபிடி, தட்டிக்கொடுத்தல் கண்ணிமைத்தல் இவை எனது ஆன்மாவை நண்பர்களிடம் கொண்டு செல்கின்றன. கைகுவித்தலும் தலை வணங்குதலும் எனது ஆன்மாவை பெரியோர்களிடம் அழைத்துச் செல்கின்றன. ஒரு முத்தம் காதலனை காதலிக்கும், காதலியை காதலனுக்கும் அளிக்கிறது. தம்பதிகளின் அரவணைப்பு கடவுளின் குழந்தை ஒன்றைத் தேடி இரு ஆன்மாக்களை ஒன்றிக்கச் செய்கிறது.

ஆனால் எமது உடல் ஆன்மாவை பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டும் இருந்தால் உமக்கு திருப்தி இல்லை. உமது அருளால் கிறிஸ்துவனின் உடல் புனிதமடைகிறது. பரிசுத்த திரித்துவத்தின் இல்லமாக மாறுகிறது. ஆண்டவன்ின் அங்கம் அங்கமாகிறது, இறைவனின் இருப்பிடமாகிறது. இந்த அருமையான உடலின் பெருமைதான் என்னே !

இறைவா உமது கருணைக் கண்களை இப்பக்கம் திருப்பும். இதோ உமக்கு முன்னால் உறங்கும் மனிதர்களின் உடல்கள்.

சிறு குழவியின் மாசற்ற உடல்
அழுக்கடைந்த விபசாரியின் உடல்
போட்டியில் கலப்பவனின் விறுவிறுப்பான உடல்
தொழிலக தொழிலாளியின் களைத்த உடல்
விளையாட்டுக் குழந்தையின் மிருதுவான உடல்

உண்ண முடியாத அளவில் உண்ட செல்வந்தனின் உடல்
பசியால் வாடும் ஏழையின் உடல்
வறுமையினால் புறம்பே தள்ளப்பட்ட சிறுமியின் உடல்
அனல் வீசும் நோயாளியின் உடல்
காயத்தினால் துன்புறும் முடவனின் உடல்
திமிர்வாதத்தினால் வாதைப்படும் மனிதனின் உடல்
எல்லாவிதமான உடல்களும், எல்லா காலத்து உடல்களும் உம் முன்னால் இருக்கின்றன.

இதோ! மரத்திலிருந்து பறித்த பழம் போன்று, தாய் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்ட குழந்தை. பலமுறை விழுந்து அடிகளையும் காயங்களையும் உணராமல் எழும் குழந்தையின் உடல். வளர்வது மிக நல்லது என்பதை அறியாமல் பாலப்பருவத்தைவிட்டு வாலிபனாகும் மாணவனின் உடல். தன் வலிமையை எண்ணி பெருமையடையும் மனிதனின் பக்குவ உடல் மெல்ல மெல்ல வலிமை இழக்கும், தளர்ச்சியடையும் வயோதிகனின் உடல். எல்லா உடல்களையும் இன்றிரவு உமக்கு அர்ப்பணிக்கின்றேன். அவர்கள் அமைதியில் உறங்கும் வேளையில் அவர்கள் மீது அருள்கூர்ந்து உமது ஆசீரைப் பொழிந்தருளும்;

அவர்கள் தூக்கமயக்கத்தில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களை நீர்தான் காப்பாற்றவேண்டும். நாளை காலையில் தூக்கம் கலைந்து உற்சாகமுடன் அவரவர் வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

அவர்கள் எல்லாரும் எசமான்களாக (பணிசெய்யப் படுவோர்களாக) வாழாமல் பணிபுரிபவர்களாகவே இருக்கட்டும். அவர்கள் இதயங்கள் சிறைகளாகாமல் எல்லாரையும் வரவேற்கும் இல்லங்களாகட்டும். மக்களை மறைக்

கும் கல்லறைகளாகாமல் இறைவனின் கோயில்களாக இருக்கட்டும். இந்த உடல்களை தங்கள் இருப்பிடமாக கொண்ட மூவிறைகளும் இன்பம் காணட்டும். இவ்வுடல்களெல்லாம் ஒளிமிகு, எழில் மிகு ஆன்மாக்களுக்கு பிரமாணிக்கமுள்ள தோழர்களாக அமையட்டும். இவ்வுலக வாழ்வின் இறுதி கட்டத்தில் 'என் உடல் ஆன்மாவோடு ஒத்துழைத்தது'' என்று எல்லாரும் கூற வேண்டும்.

மீட்பரே! உமது பார்வையிலும், உமது தாயின் பார்வையிலும் (நீங்கள் இருவரும் எங்கள் மண்ணில் வாழ்ந்தவர்கள்) எல்லா மனிதர்களின் உடல்களும் உமது நித்திய விண்ணக மகிமையின் விருந்தாளிகளாவார்கள்.

* * *

அன்புடையீர்!

இறைவன் எல்லாம் நிறைவானவர். குறைவற்றவர். எப்பண்பிலும் பழுதற்றவர். எல்லா நற்குணங்களின் நிறைவே இறைவன். அளவில்லா அன்பு கொண்டவர் இறைவன். இல்லை. அன்பே இறைவன். தூய்மையே இறைவன்! பொறுமையே இறைவன்! கனிவே இறைவன்! என்று நாம் தொடர்ந்து எழுதலாம் முற்றுப்புள்ளியின்றி.

அவர் சாயலாகவே மனிதனைப் படைத்தார். மண்ணிலிருந்து ஓர் உருவத்தை உருவாக்கி அதனுள் தன் ஆவியை ஊதி மனிதனைப் படைத்தார். உடல் அழிவுக்குரிய பொருள். ஆன்மா அதற்கு உயிர் கொடுக்கிறது.

ஆன்மா இறைவனின் சாயல்—இறைவனின் ஆவி. அஃதே நம் உடலுக்கு உயிர் கொடுக்கிறது. இறைவனே நம்மில் வாழ்கிறார். நமது உடல் இறைவனின் இருப்பிடம். ஆகையால் நாம் நம் உடலை மதிக்க

வேண்டும். நாம் நம் உடலை அவமதித்தால் நாம் கடவுளையே அவமதிக்கிறோம். எனவே இறைவனால் படைக்கப்பட்ட மனிதனின் மாண்புமிகு உடலுக்கு அவசங்கை செய்யும் அளவில் வெளியீடுகளில் அச்சடிப்பது அறியாமையைக் காட்டுகிறது. தூய்மையே உருவானவர் படைத்த தூய்மையான உடலை காம வெறியூட்டும் பொருளாக பயன்படுத்துவது மடமையாகும். தொழிலகங்களில் உருவாகும் அழியும் பொருள்களை விற்பதற்காக விளம்பரங்களில் அப்பொருள்களின் படங்களோடு பெண்ணின் உடலை அரைகுறை ஆடையோடு அச்சிடுதல் அறியாமையாகும்.

அத்தகைய ஆபாசப் படங்களை பலமுறை பார்த்து சிரிப்புக் கடலில் அமிழும் அநாகரிகர்களைப்பற்றி இறைவன் என்ன எண்ணுகிறாரோ? இறைவன் நம்மை எதற்காக படைத்தார்? அவரை அறிந்து, அன்பு செய்து அவருக்கு பணிபுரிந்து அவரோடு நித்தியத்திற்கும் இன்பமுடன் வாழவே நம்மை படைத்தார்.

இறை படைப்பில் மிக சிறந்தவை — உடலற்ற சம்மனசுகளும் உடலும் ஆன்மாவும் கொண்ட மனிதர்களும். ஆன்மா உடலை ஆளவேண்டும். உடல் ஆன்மாவோடு ஒத்துழைக்க வேண்டும்—உடல் ஆன்மாவை ஆளக்கூடாது. இறைசாயல் கொண்ட ஆன்மா அழிவுக்குரிய உடலை ஆளவேண்டும். அழிவுக்குரிய உடல் அழிவற்ற ஆன்மாவை ஆளக்கூடாது. அவ்வாறு நிகழ்ந்தால் (உடல் ஆன்மாவை ஆண்டால்) படைப்பின் நோக்கமே மாறுபடுகிறது. இறைவன் மிருகங்களுக்கு சுதந்திரம் கொடுக்கவில்லை. ஆனால் மனிதனுக்கு ஆறுவது அறிவைக்கொடுத்து மனசுதந்திரம் அளித்திருக்கிறார் அன்பே உருவான இறைவன். மிருகங்கள் உணர்ச்சிக்கு அடிமைகள். ஆனால் மனிதர்கள் உணர்ச்சிக்கு அடிமைகள் அல்லவே. உணர்ச்சிகளை நாம் அரசாளவேண்டும். மனிதன் இறைவனுக்காக

படைக்கப்பட்டவன். அவன் இறைவனை என்று அடைவானோ அன்றுதான் அவன் நிம்மதி அடைவான். நாம் இவ்வுலக வாழ்வில் இறைவனை நோக்கி நடந்து கொண்டே இருக்கிறோம். ஆதாமின் முதல் பாவத்தினால் நம்மில் உண்டான தீய உணர்ச்சிகள் நமக்கு தடையாக இருக்கின்றன. அத்தீய உணர்ச்சிகளை முற்றும் அழிக்க நாம் இவ்வுலகில் வாழும் வரை முடியாது. ஆனால் அவை களை அடக்கலாம். குறைக்கலாம். அவ்வாறு செய்தால் நாம் குறைகளை குறைத்து நிறைவினைப் பெறுவோம்.

இம்மண்ணகத்தில் ஆன்மாவோடு ஒத்துழைத்த உடல் இறைவனோடு இன்பம் காணும். அவ்வின்ப நிலையை எல்லா மனிதர்களும் அடைய வேண்டும். ஒவ்வொருவரும் சிறிது நிந்தனை செய்வோம். "எனது உடல் ஆன்மாவோடு ஒத்துழைக்கிறதா ?" ஒத்துழைக்கா விட்டால் காரணங்களை கண்டுபிடிப்போம். அவைகளை வேரோடு ஒழித்து உடலை ஆன்மாவுக்கு அடிபணியச் செய்வோம். எல்லா மனிதர்களுக்கும் அத்திறமையை (உடலை ஆளும் திறமையை) அளித்தருள இறைவனை மன்றாடுவோம்.

செபம்

இறைவா, நீர் எங்களை உமக்காகவே படைத்தீர். நாங்கள் உம்மை அடையும்வரை எங்களுக்கு நிம்மதி இல்லை. நீர் தூயவர், உம்மை அடைய நாங்களும் தூய வர்களாக வேண்டும். நாங்கள் புனிதர்களாக எங்கள் உடல் உமது சாயலான ஆன்மாவோடு ஒத்துழைக்க அருள்புரியும். எங்கள் உடல் உம்மை உலகுக்கு உயர்த்திக் காட்டும் கோவில்களாக துணைபுரியும்; மண்ணுலகில் உமது இருப்பிடங்களாக நாங்கள் வாழ்ந்து விண் ணுலகில் உம்மோடு ஒன்றிக்க அருள்புரியும்.

ஆடிச் செல்லும் படகு

வாழ்க்கை என்பது ஒரு காட்டாறு, அந்தக் காட்டாற்றைக் கடக்க இல்வாழ்வெனும் படகில் போக வேண்டுமென்று ஆண்டவன் எனக்கு எழுதி வைத்து விட்டான். கலியாணம் முடிந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த இருபது வருடத்துக்குள் 'அப்பப்பா' நான் பட்ட கஷ்டம் எனக்குத் தெரியும். 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்று சொல்ற மாதிரி, பி. ஏ. பட்டம் வாங்கி பெரிய பருத்தி மில், நல்ல ஊதியம் கிடைக்குமென்று வந்து வேலையில் சேர்ந்து இருபத்து மூன்று வருடங்களாச்சு. இதற்குள் "சம்பளம் உயர்த்தனும்னு" ஸ்டிரைக்; 'தொழிலாளர்களுக்கு வருடா, வருடம் போனஸ் போட வேண்டும்னு ஸ்டிரைக்'; இந்த ஸ்டிரைக், அந்த ஸ்டிரைக்னு சொல்லி எழுபத்தெட்டு ஸ்டிரைக்குகள் ஆரம்பிச்சு, நம்ம வாயிலேயும், ஊரில்ல என்னை மாதிரி கஷ்டப்பட்டு வருகிற, பிள்ளைகுட்டிக் காரங்க வயிற்றிலேயும், மண்ணை அள்ளிப்போட்டுட்டானுக, இந்த பாவிப் பயல்கள். இந்த ஸ்டிரைக்கல வேற நம்ம குழந்தைகள், பள்ளிக்கூடம் போனு "வாத்தியார் கொட்டுராரு, டீச்சர் ரெம்ப அடிக்கிருங்கனு" சொல்லிக்கொண்டு, அவுங்க பள்ளிக்கூடம் போக மாட்டோம்னு ஸ்டிரைக் செய்கிறுர்கள். இவர்களுடைய புத்தகங்களுக்கு செலவழித்த பணம் எல்லாம் பாழாப் போச்சு. இநதக் குழந்தைகளை நம்ம மனைவி அடக்கிடுவாள், நல்ல முறையில் வைத்திடுவாள் என்று நினைக்க ஆண்டவன், அவளுக்கு அடிக்கடி நோயைக் கொடுத்து விட்டான். நோயைக் கொடுத்த ஆண்டவன் அதைக் குணப்படுத்த பணம் கொடுக்க மாட்டானு? வாங்கின சமபளம் எல்லாம் வைத்தியனுக்கும் வாணிகனுக்கும் தான் போய்ச் சேருகிறது.

பிள்ளைகளைக் கொடுத்த ஆண்டவன், மூத்த பையனை வாலிபமாகி வருகிற காலத்தில், அழைத்திட்டுப் போயிட்டான். அவனிருந்தா, கஷ்ட காலத்தில், இதே மாதிரி புயல் வருகிற நேரத்தில், என் கூட இருந்து, துடுப்புப் போட்டு, தோணியை ஒரு மாதிரி, ஆபத்தில்லாமல் கொண்டு போகலாம். அதுக்கும் வழியில்ல.

இதே சமயத்தில், படித்து, தேர்வு எழுதுகிற சமயம் பார்த்து, சின்ன மகனுக்கு காய்ச்சல், வயிற்று வலி, கண் வலி என்று கண்ட நோயெல்லாம் வந்து விடுகின்றது. 'ஆண்டவனுக்கு கண்ணுண்டா, காதுண்டா என்று கேட்டா,' நல்லவங்க, நாலுபேர், 'ஆண்டவனுக்கு கண்ணில்லாட்டா, இரக்கமில்லாட்டா, இவ்வளவு இலஞ்சமும், கொலையும் குற்றமும் செய்த உலகத்தை இத்தனை நாட்களாக நல்ல முறையில் வைத்திருப்பாரா?' என்கிறார்கள். இது உண்மைதான்; உலகத்தை ஆண்டவன் மனிதனுக்கு அனுபவிக்க கொடுத்தான்; ஆனால் உலகம் மனிதனை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. எது உண்மை? என்கிறதே தெரியவில்லையே. வாழ்க்கை ஒரு காட்டாறு; வாழ்வு ஒரு தோணி.

இது வரைக்கும் கஷ்டப்பட்டு 1973 மைல் கல் வரைக்கும்-என்னுடைய தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா ஓட்டி வந்த மாதிரி,—நானும் எப்படியோ, படகை ஓட்டி வந்து விட்டேன். 1974 மைல் கல் சமீபத்தில் வரப் போகிறது, ஏன்? அதோ வந்து விட்டது. இந்த மைல் கல்லைக் கடந்து, அடுத்த மைல் கல்லை எப்படிக் கடக்கப் போகிறேனோ? இந்த இரு கற்களுக்கிடையில் எத்தனை புயல்களோ? எத்தனை தடவை, படகை கவிழ்க்கிற அளவுக்கு துன்பமெனும் தண்ணீர் உள்ளே வரப் போகிறதோ? என்னுடைய மனைவி மக்கள் இந்த வருடத்தில் எப்படி வாழப் போகிறார்களோ? இந்த வருடமும், மில்லில் ஸ்டிரைக் இருக்குமா? குழந்தைகளும் ஸ்டிரைக் பண்ணுவாங்களா? சின்னமகன் இவ்வருடம்

படித்து பட்டம் வாங்கிடுவானு? ஆண்டவனே என்ன செய்யப் போகிறேன்; தெரியவில்லையே. இன்னும் 'அப்பப்பா' எத்தனை எதிர் நீச்சல்கள்! பெண் பிள்ளைக்கு கலியாணமாகனும்; பையனுக்கு, படித்து பட்டம் பெற்றவுடன், இந்தக் காலத்தில் வேலை கிடைக்கனும்; என் மனைவி, இந்த வருடமாவது, நல்ல சுகத்துடன் இருக்கனும்; குழந்தைகள் எல்லாம் நன்ருகப் படித்து முன்னேறனும்; வாங்கின கடனையெல்லாம் திருப்பிக் கொடுக்கனும்; எல்லா தேவைகளையும் நிறைவேற்ற பணம் வேண்டும், எங்கு செல்வேன்? ஆண்டவனே, 'நம்பினுர் கெடுவதில்லை' என்றும் சொல்கிறுர்கள். "எனக்கு வழி காட்டும்" என்று சொல்லிக்கொண்டு அவன் காந்தியின் பூங்காவுக்குள் நுழைந்தான். பூங்காவின் ஒரு புறத்திலிருந்த மலர் வளையத்திற்கு எதிரேயுள்ள நாற்காலியில் அமர்ந்தான்.

அப்பூங்காவிலுள்ள மலர்வளையத்தில் ஓர் அழகிய பூங்கொடியினைக் கண்டான். அக்கொடி தன்னம்பிக்கையுடன் ஏதோ ஒன்றினைப் பற்றிக்கொள்ள நிமிர்ந்து, பக்கத்திலுள்ள ஒரு கம்பை நோக்கிச் சென்றது.

மலர் வளையத்திற்கு அருகில் இரண்டு வயது குழந்தை ஒன்று, அதன் தாய், தந்தை, அக்காவுடனும், மெதுவாக தவளையைப்போல் புல்தரையில் ஊர்ந்து வந்தது. சிறிது நேரத்திற்குப் பின், அக்குழந்தை அவனுடைய முத்துப் பற்களைக் காட்டிய வண்ணம், அலையில் அங்குமிங்கும் ஆடிச் செல்லும் படகைப்போல, தள்ளாடி நடந்து வந்தான். அவனுல் முடியவில்லை என்று அவன் உணர்ந்தவுடன் அவனது அக்காவின் கையையும், அம்மாவின் சேலை நுனியையும் இறுகப் பிடித்துக் கொண்டான். பின் அவன், பெற்ருேரையும் அக்காவையும் பார்த்து சப்தம் போட்டு சிரித்தான். என்ன சந்தோஷம்! என்ன நம்பிக்கை! அவனுடைய பெற்ருேர், அவன் விழும்வரை அவனை ஒன்றும் செய்யா

விடினும், அவனுக்கு உதவியாக அருகில் நின்ருர்கள். அவன் விழுந்ததும், அவர்களுடைய உதவி அவனுக்கு உடனே கிட்டியது. ஐந்து குழந்தைகளுக்கு தகப்பனுகிய அவனுக்கு இக்காட்சி; ஒரு காட்சியாக மட்டுமே தோன்றினும், இந்நிகழ்ச்சி ஒரு புதிராகவும் இருந்தது.

ஏதோ ஒன்று நினைத்தவனுக பூங்காவை விட்டு வெளியேறினன். சிறிது தூரம் சென்றபின், ஒரு சப்தம் அவனைப் பார்த்து வந்தது. அது ஒரு பையனின் குரல். அப்பையன் "ஹாப்பி நியூ இயர் மாமா" என்ருன். புத்தாண்டில் புத்தாடைகள் உடுத்தியும் விரல்களில் ஓரிரு மோதிரங்கள் அணிந்தும், ஜப்பானில் செய்யப்பட்ட ஒரு கைக்கடிகாரம் கட்டியும், வந்திருந்தான். அவனுடைய அழகும், ஆடையின் அழகும், அவைகளின் நிறமும், அவனுடைய மலர்ந்த முகமும், அவனுடைய குரல் ஒலியும், 'மாமா' என்ற சொல்லும், கவலையெனும் பசியால் வாட்டிய அவனை, அக்கவலைகளிலிருந்து மறக்கச் செய்தன.

அப்பையன் "மாமா, எப்படி சுகம், வீட்டில் அத்தை, தம்பி, தங்கைகள் சுகமாக இருக்கிருர்களா?" என்று வினவினுன். அதற்கு அவன் சிரித்தான். மேலும் அவன் "போனவருடம் மாமா, நான் பாடத்தில், விளையாட்டில் நடிப்பில், பேச்சுப் போட்டியில் எல்லாம் பரிசுகள் வாங்கினேன். போனவருடம் கடவுள் எனக்கு நல்ல சுகம், நல்ல புத்தியும் கொடுத்தாரு, இந்த வருடமும் எனக்கு தருவாரு மாமா" என்று கூறிவிட்டு, அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, போய்விட்டான்.

அப்பையன் அவனுடைய நெருங்கிய நண்பரின் மகன். அவனுடைய அழகிலும், ஆடையின் அழகிலும், அவனது சிரிப்பிலும், இதைவிட மேலாக, அவனது வார்த்தைகளில் தன்னை மறந்த அவன் ஏதோ ஒன்று கண்டுபிடித்ததாக, அஃது என்ன என்பதை இன்னு

தெளிவுற அறியாதவனுகச் சென்ருன்." நான் அச்சிறு வனைவிட எத்தனை காரியங்களில் அனுபவம் மிக்கவன். என்னிடம் என்ன குறையுள்ளது?" என்று தன்னைத் தானே கேள்வி கேட்டவனுக நடந்தான்.

அச்சிறுவனிடத்தில் ஏதோ ஒன்றினைக் கண்டு பிடித்தான். அஃது அவனுக்கு புத்துயிர் ஊட்டியது. அன்று அவனுக்கு, அச்சிறுவனைவிட என்றுமில்லா ஒரு நம்பிக்கை பிறந்தது. இப்புது வருடம், அவனிடத்தில் ஒரு நம்பிக்கையுடன் பிறந்தது. இவ்வாண்டு, "எனக்கு நல்ல வருடம்" என்ற நம்பிக்கையுடன், புத்துணர்ச்சி யுடன், வீடு நோக்கி நடந்தான்.

G. Pushparaj

சமயத் தலைவருக்கும்
ஆய்வாளருக்கும்
நற்செய்தியாளர்.

மனந்திரும்புங்கள்

(மத். 3 : 2, 4 : 17)

அன்புடையீர்,

அனைவருக்கும் நம் புத்தாண்டு வாழ்த்துக்கள். இவ்வாண்டில் நம் இணைப்பு என்றும்விட அதிகமாய் வளர வேண்டும் என இறைவனை வழுத்துவோம்.

தம் முதல் பொருளை இழந்து விபரீதமான புதுப் பொருளையும் உணர்த்தத் துவக்கும் சொற்களில் ஒன்று மனந்திரும்புங்கள் என்பது. அதன் உண்மைப் பொருளை உணர்வோமாக.

மனிதன் வழக்கமாக உலக ஆசைகளில் ஈடுபட்டுச் சிக்கிக்கொள்கிருன். அவற்றை விட்டுத் தன் மனதைத் திருப்பி இறைவனில் ஈடுபடும்படி, இறைவன் காட்டும் வழிப்படி வாழ்க்கை நடத்தும்படி, மனந்திரும்பும்படி தூது சொல்லிவிடுகிருர் இறைவன். கள்ளங்கபடமற்ற நன்மனது படைத்தவர் இறையருள் ஒளியில் நிலைமையை உணர்ந்து மனந்திரும்புவார்; இறைவனையும் அவர் காட்டும் கத்தோலிக்க அகில மனிதகுல வழியையும் கடைப்பிடிப்பார். ஆனல் நன்மனதற்றவர் இந்த வார்த்தையிலேயே ஆயிரம் அர்த்தங்களைப் புகுத்திக் கெடுப்பர்.

இன்று மனந் திரும்புவது என்ருல் நம் பவிசும் வரும்படியும் கெடும். மனம்போல் வாழ்வதை விட வேண்டியிருக்கும். புது வழி ஒரு வேளை சிரமமாயிருக்கலாம். நமக்குப் பழக்கமான பொருள், இடம், ஆட்கள் முதலியவற்றை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும். நம் வழியை, மதத்தைவிட்டுப் பலர் பிரிந்து சென்ருல்

நமக்குச் செல்வாக்கு குறைந்து அவமானமாக இருக்கும்: நம் கட்சி ஆள் பலம் குறையும்; அப்படி நாம் போகவிடுவதா? என்றிப்படிப் பலவாறு கலங்குகிறது உலகத்தையே ஆதாயமாகவும் சதமாகவும் நினைப்பவரது மனது. ஆகையால் தாங்களும் மனந்திரும்புவதில்லை; பிறரையும் மனந் திரும்ப விடுவதில்லை. மாருக, தங்களது வழக்கமான போக்குகளுக்கு ஆதாரமாகவும் இறைவனது நற் செய்திக்கு விரோதமாகவும் சாக்குப் போக்கான, வைராக்கியம் நிறைந்த எண்ணற்ற காரணங்களைக் காட்டுவர்.

நம்மில் பலகுறைகள் இருப்பதும், நம் அறிவையும் பழக்கவழக்கங்களையும் உலக முடிவுவரை நாம் திருத்தி வளர்ந்துகொண்டே போவதுதான் முறை என்பதும் தெளிவாய் இருக்கவேண்டும். இறுதியான உண்மை ஒன்றே: அதை உணர்த்தும் கோட்பாடு வழிபாடுகளின் தொகுப்பும் ஒன்றே, கலாச்சார வேறுபாட்டுக்கு மட்டும் இடம் உண்டேயொழிய கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. அப்படி வேறுபாடு இருந்தால் அதற்கு நம் அறிவு வளர்ச்சியடையவில்லை என்பதுதான் காரணம். இந்த அடிப்படையில் பார்த்தால், உண்மையான மதம் ஏதாவது ஒன்றுதான்: அதில் அனைவரும் சேர்ந்து ஒன்றுபட்டு வாழ்ந்து ஒன்றுபட்டு இறைவனை வழிபட வேண்டுமென்பதே இறைவனது நற்செய்தி. இதன்படி, நமக்குப் பழக்கமான போக்குகளை விட்டுவிட்டு நாம் மனந் திரும்ப வேண்டுமென உணர்த்தப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளப் பிரியமில்லாதவர்கள் ஆயிரம் எதிர் வாதங்களை உருவாக்குவது வழக்கம். நிதான கூட்டு ஆய்வை மேற்கொள்ளாமல் எதிர்வாதத்துக்கும் சண்டைக்கும் அவர்கள் முன் செல்வதிலிருந்தே அவர் கள் செய்வது தப்பு என்பது தெரியவேண்டும்.

இவ் உலகுக்கு இறுதிக் காரணம் என்று எதுவும் இல்லையாம். முரண்பாடான கொள்கைகளும் கூட அள

வற்ற கடவுள் முன்னால் முரண்பாடற்றவையாகிவிடுமாம். ஆகையால் எம்மதமும் சம்மதம்தானும். தங்கள் வேதமே கடவுள் வெளியிட்டதாயிருப்பதால் மற்ற எல்லோரும் அதில் சொல்லப்படும் கோலங்களை மேற்கொள்ள வேண்டுமாம். அளவற்ற உண்மையை எந்த ஒரு மதமும் பூர்த்தியாக உணர்த்திவிட முடியாதாம். அந்தந்த இடம் காலத்துக்கென வெவ்வேறு மதங்களும் தலைவர் களும் இருப்பதுதான் முறையாம். சிலர் பிறர் மீது தம் மதங்களை வைத்துத் திணிக்கப்பார்க்கிறார்களாம். சில மதங்கள் வெளிநாட்டு மதங்களாம். தன் மதத்தைப் பூர்த்தியாகக் கிரகித்த பின் மற்ற மதத்தைப்பற்றி நினைத்தால் போதுமாம். வயிற்றுக்கில்லாமல் மக்கள் அவதிப்படும் இவ்வேளையில், பலவிதமான நிர்வாக வேலைகளில் மூழ்கிக் கிடப்பவருக்கு மதத்தைப்பற்றி நினைக்க நேரமில்லையாம். அவனவனுக்கு அவனவன் மனச்சாட்சி சொல்வது தான் சரியாம். எது உண்மை யானாலும் சரி, பிறருக்குத் தீங்கிழைக்காமல் கூடிய மட்டுக்கும் உதவி செய்து வாழ்ந்தால் எப்படியும் வாழ்க் கையின் பலன் கிடைக்குமாம். ஒருவன் எவ்வளவு பெரிய தப்பு செய்தாலும் கடவுள் உண்மையான கடவுளானால் கட்டாயம் மன்னித்து முக்தி கொடுத்துவிடுவானும். இப்படிப் பலவிதமான முறைகளில் பேசி கடைசியில் தத்தம் வழக்கமான போக்குகளிலேயே போகின்றார்கள். இதற்கிடையில் சிலர் தம் கெட்டிக்காரத் தனத்தைக் காட்டுவதற்குப் பிறரை மதம்மாற்றி விளம்பரப்படுத்து வதில் நேரத்தைப் போக்குகிறார்கள். அல்லது பிறர் மதங்களுக்கு விரோதமாக அபத்தங்களை எழுதிக் குவித்துப் பரப்புகின்றனர். மெய்–அன்பர்களானால், உண்மை எது என அன்புடன் கூடித் தேடிப் பிறருக்கு நல்வழி காட்டுவதன்றோ முறை!

உண்மை எது? அதை நாம் எல்லோரும் கடைப் பிடித்தால் வரும் நன்மை என்ன? என்பதைத் தலைவர்

கள் தம் முதல் வேலையாகக் கூடி ஆய்ந்து, யாவருக்கும் புரியும் முறையில், யாவரும் சேர்ந்து, வெளியிட்டால், தாமாக ஆய்வதற்கு அவகாசமில்லாவிட்டாலும் நன்மனதுள்ள மக்கள் கடைப்பிடிக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் ஒன்று கூடி, நேர்மையான மனதுடன், அன்புடன், கூடி ஆய்வதற்கு, மனந் திரும்புவதற்குத் தலைவர்கள் தயாராயிருக்கிறார்களா? உலகத்தை மாற்ற முடியாது, ஒன்றுபடுதத முடியாது என்பீரா? மற்றவர்கள் பேச்சு இருக்கட்டும், நும் மன நிலை என்ன?

இவண்,
சுவாமி ஞா. மிக்கேல், சேசர்
சர்வ மத ஐக்கியப்பணி
நற்செய்தி ஒளி நிலையம்,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

CUM PERMISSU SUPERIORUM

Imprimatur : ✠ P. Justin Diraviam, *Archbishop of Madurai*

Edited by Rev. Fr. M. Asirvatham, S.J.,
St. Mary's, P.B. No. 56, Madurai—1.
Printed and Published by Rev. Fr. S. M. Selvaraj,
Manager, De Nobili Press, Madurai-625006.

Regd. No. M. 6743

பொய்யா விளக்கு வெளியீடுகள்

—O—

திருமறை உரையாடல்கள்—கத்தோலிக்க மறை பற்றிய முழு விளக்கம் பக்கம் 3+396 (நூல் வடிவில்)	....	2-00
வாழ்க்கைப் படகினிலே (76 பக்கங்கள்)	....	0-75
ஒளிப்பாதை (44 பக்கங்கள்)	....	0-35
கிறிஸ்துவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?	....	0-10
நிகரில்லா நித்தியன்	....	0-10
கடவுளா கசடனா?	....	0-10
விடுதலை வீரன்	....	0-10
மரித்தவர் உயிர்த்தார்	....	0-10
சாவிற்கு சவால்	....	0-10
மலைப் பிரசங்கம்	....	0-10
நான் கிறிஸ்தவனாக வேண்டும்	....	0-40
அறிவுக்கு ஒளி	....	0-25
இயேசு ஒப்பற்ற கிறிஸ்து	....	0-30

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :-

பொய்யா விளக்கு அலுவலகம்

செயின்ட் மேரீஸ்

P. B. 56, மதுரை-625001